**புதுச்சேரி அரசு**
**மாவட்ட ஆட்சித்துறை நடுவர் அலுவலகம், புதுச்சேரி**

## செய்தி குறிப்பு

எதிர்வரும் தீபாவளி 2023ஐ முன்னிட்டு புதுச்சேரி மற்றும் ஏனாம் பகுதிகளில் தற்காலிக பட்டாசுக்கடை வைக்க விரும்புவர்களின் கவனத்திற்கு:

2. மேற்படி, பட்டாசுக்கடை வைக்க விருப்பம் உள்ளவர்கள், புதுச்சேரி பேட்டையன்சத்திரம் வழுதாவூர் சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 08.09.2023 -ற்குள் நேரடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3. விண்ணப்பிக்கும் போது கட்டாயம் இணைக்கப்பட வேண்டியவைகள்:

(1) புகைப்படத்துடன்கூடிய பூர்த்தி செய்யப்பட்ட படிவம் (Form AE-5)

(2) பட்டாசு விற்பனை செய்ய போகும் இடத்தின் வரைபடம் (Site Plan) - வரைபடத்தில், கடையில் பட்டாசு வைத்துக்கொள்ளும் அளவு, கடைக்கு செல்வதற்குரிய வழி/சுற்றியுள்ள சாலைகள், கடையைச்சுற்றி பதினைந்து மீட்டர் சுற்றளவில் உள்ள பிறக்கடைகள் பற்றியும் குறிப்பிடவேண்டும்.

(3) இடத்தின் உரிமை தொடர்பான பத்திரங்கள் (Title/Lease deed)

- சொந்த இடமாக/கடையாக இருப்பின், அதற்குண்டான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்.
- வாடகை இடமாக/கடையாக இருப்பின், வாடகை பத்திரம், பட்டாசுக்கடை வைக்க உரிமையாளரின் ஆட்சேபனை இல்லை என்ற நோட்டரி பத்திரம் மற்றும் மின் ரசீது (Electricity Bill) /தண்ணீர் ரசீது (water Bill).

(4) முகவரி மற்றும் அடையாள சான்றுகள்

(5) விண்ணப்பதாரரின் புகைப்படம் – 2 (passport size).

4. மேலே குறிப்பிட்ட ஆவணங்களின் நகல்கள் மூன்று பிரதிகள் (1+3) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

5. 08.09.2023 மாலை 05.45 மணிக்குள் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே 2023 தீபாவளிக்காக பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

DISTRICT MAGISTRATE * PUDUCHERRY *

(E. வல்லவன், இ.ஆ.ப.)
மாவட்ட ஆட்சித்துறை நடுவர்
புதுச்சேரி